[1973 மார்ச் 3

சிறப்புச் சிற்றங்காடிகள்

* 234. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக முக்கிய கிராமங்களில் சிறிய அளவில் கூட்டுறவுத் துறையில் சூப்பர் மார்க்கெட்டுகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1972-73-ல் 10 சிறப்புச் சிற்றங்காடிகள் துவக்க ரூ. 4.50 லட்சம் நிதியுதவி அளிக்க செயற்குறிப்பு உள்ளது.

1972-73-ல் 10 சிறப்புச் சிற்றங்காடிகள் மினி சூப்பர் மார்க்கெட்டுகள்—துவக்கப்படுவதோடு நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தின் இறுதியில் மொத்தம் 100 சிறப்புச் சிற்றங்காடிகள் செயல்பட உள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பொதுவாக இந்த சிறப்புச் சிற்றங்காடிகளில் விற்கப்படும் பண்டங்கள் நல்ல தரமானவைகளாகவும், குறைந்த விலையிலும் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த மினி சூப்பர் மார்க்கெட்டுகளை எல்லாக் கிராமப்புறங்களிலும் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எல்லாக் கிராமங்களிலும் சிறப்புச் சிற்றங்காடிகளைத் திறக்கும் திட்டம் இப்போது இல்லை. ஆனால் இன்றைக்கு நாள் ஒன்றுக்கு 2,000 ரூபாய்க்கு அதிகமாக விற்பனையாகக்கூடிய இடங்களில் சிறப்புச் சிற்றங்காடிகளைத் திறக்கும் திட்டம் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது நாளுக்கு நாள் அத்தியாவசியமான பொருள்களின் விலை திடீர் திடீர் என்று உயர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் இப்படித் திறக்கப்பட்டிருக்கும் கூட்டுறவு சிறப்புச் சிற்றங்காடிகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை எல்லாம் நஷ்டத்தில் செயல்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த நஷ்டம் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சரவர்கள் ஆராய்ந்து சீர் செய்ய என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த மினி சூப்பர் மார்க்கெட்டுகளில்—எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் படி, 29 சிற்றங்காடிகளில் 28 லாபத்தில் இயங்கி வருகின்றன. ஒன்று மட்டும் நஷ்டத்தில் இயங்குகிறது. அதைக்கூட சரிசெய்து கொண்டுவருகிறார்கள்.

1973 மார்ச் 3]

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 100 சிறப்புச் சிற்றங்காடிகள் இருக்கும் என்று சொன்னார்கள். அதில் இதுவரை எத்தனை திறக்கப்பட்டிருக்கின்றன? இன்னும் ஓராண்டு காலத்தில் எத்தனை திறக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதுவரை 45 அல்லது 46 சிறப்புச் சிற்றங்காடிகள் திறக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஆண்டு முடிவில் 52 அல்லது 53 சிற்றங்காடிகள் திறக்கப்படும். இன்னும் கடைசி ஆண்டில் 40, 50 திறப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல நான் ஒன்றுக்கு 2,000 ரூபாய்க்கு மேல் விற்பனையாகக்கூடிய எல்லா இடங்களிலும் சிறப்புச் சிற்றங்காடிகள் திறக்கத் திட்டம் இருக்கிறது. அதற்குத் தாராளமாக பணவசதியும் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : சிறப்பங்காடிகள் மாவட்டங்கள்தோறும் எத்தனை என்று அறிவிப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாவட்டவாரியாக இப்போது என்னிடம் கணக்கு இல்லை. எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

திரு. எ. க. துரைசாமி : இத்தகைய சிறப்பு அங்காடிகளை எல்லா தாலுக்கா தலைநகரத்திலும் உடனடியாக ஏற்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வட்ட தலைநகரங்களில் அமைப்பது என்பதுதான் இப்போது திட்டமாக இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மினி சூப்பர் மார்க்கெட்டுக்கு எவ்வளவு முதலீடு செய்யப்படுகிறது, நிர்வாக அமைப்பு எப்படி ஏற்படுத்தியிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சிறப்பு மூலதனமாக 30 ஆயிரமும், கடன் உதவியாக 15 ஆயிரமும், ஆக 45 ஆயிரம் அளிக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சிறப்பங்காடிகளை முனிசிபல் நகரங்களில் திறப்பதற்கு முதலிடம் கொடுக்கப்படுமா? 50 ஆயிரத்திற்குமேல் மக்கள் தொகை உள்ள இடங்களில் கவனம் செலுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : முனிசிபல் நகரங்களில் பேரங்காடிகளைத் திறக்கவே வாய்ப்பிருக்கிறது. வட்டத் தலைநகரங்களில்தான் சிற்றங்காடிகள் திறப்பது என்கிற திட்டம் இருக்கிறது.

திரு. த. சோனையா : சிற்றங்காடிகளை சிறு கிராமங்களில் ஏற்படுத்த முடியாது என்று சொன்னாலும், நகராட்சிகள், மாநகராட்சிகளில் வேறுபல வசதிகள் இருப்பதால், மேஜர் பஞ்சாயத்துகளிலாவது சிற்றங்காடிகளை ஏற்படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மேஜர் பஞ்சாயத்துகள் 600 இருக்கின்றன என்று கருதுகிறேன். எல்லாவற்றிலும் உடனடியாகத் திறப்பது என்பது முடியாது. இப்போது கையில் இருக்கிற 50 சிற்றங்காடிகளை அமைக்கவே பலயிடங்களில் யாரும் முன்வரவில்லை. இதைச் சிறப்பாக நடைபெற வழி செய்தால் பின்னால் எல்லாவற்றிலுமே ஏற்படுத்த முடியும்.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : கன்னியாகுமரி நகரம் தென்கோடியில் இருப்பதால், உலக நாடுகள் பலவற்றில் இருந்து பயணிகள் இங்கே அதிகம் வருவதால், கன்னியாகுமரியில் சிற்றங்காடி, பேரங்காடியை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நாகர்கோயிலில் பேரங்காடி இருக்கிறது. கன்னியாகுமரியில் திறக்கவேண்டுமென்று சொன்னார். நாள்தோறும் 2 ஆயிரம் ரூபாய் வியாபாரம் இருக்கும் என்று கருதி யார் அமைக்க முன் வந்தாலும் அரசு உதவி செய்யும்.

திரு. கு. காமாட்சி : கிராமங்களில் சிற்றங்காடிகளை அமைக்காவிட்டாலும் பக்கத்தில் உள்ள பேரங்காடியின் மூலம் கிராமங்களுக்குச் சென்றுவர நடமாடும் சிற்றங்காடிகளையாவது ஏற்படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நடமாடும் அங்காடிகள் என்பதை நான் விரும்பவில்லை. காரணம் இவற்றில் சாமான்கள் காணமல்போவதுதான் முக்கியமான குறை. நடமாடிக்கொண்டே இருந்தால் இதற்குத்தான் வாய்ப்பு அதிகமாகிவிடும். சின்னஞ்சிறு மினிமினி மார்க்கெட்டுகளை கிராமங்களில் திறக்கலாமா என்பது ஆலோசனையில் இருக்கிறது.

திரு. இரா. மாணிக்கவாசகம் : பொள்ளாச்சி, திருப்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள மினி மார்க்கெட்டுகளை கோவை சிந்தாமணி மார்க்கெட்டோடு இணைக்கும் திட்டம் பற்றி யோசிக்கப்பட்டதா ? அதை உடனே செயல்படுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஈரோடு மினி மார்க்கெட் கோவை சிந்தாமணி மார்க்கெட்டோடு இணைக்கப்பட்டுவிட்டது. பொள்ளாச்சி, திருப்பூர் மினி மார்க்கெட்டுகளும் சீக்கிரத்தில் இணைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

1973 மார்ச் 3]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மினி மார்க்கெட் என்பதற்கு சிறு சிறப் பங்காடி என்று அழைக்கலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மினி மார்க்கெட்டுக்கு சிறு சிறப் பங்காடி என்றுதான் சொல்லிக்கொண்டு வருகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சூப்பர் மார்க்கெட், மினி மார்க்கெட், மினிமினி மார்க்கெட் என்பதாக எல்லாம் சொல்கிறார்களே, விற்பனையை வைத்து இப்படிப் பிரிக்கிறார்களா? போடுகிற மூலதனத்தை வைத்து இப் படிப் பிரிக்கிறார்களா? மக்கள் தொகையை வைத்துப் பிரிக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: சூப்பர் மார்க்கெட் என்றால் ரூ. 2 லட்சத்திற்குமேல் கொடுக்கிறோம். மினி மார்க்கெட் என்றால் 45 ஆயிரம் கொடுக்கிறோம். பொதுவாக பெரும் அளவு லாபம் இல்லாவிட்டாலும், தன் காலில் நிற்கும்படியாக நடக்கக்கூடிய சாத்திய கூறுகள் இருக்கிறதா என்று பார்த்து ஏற்பாடு செய்கிறோம்.

திரு. ஆ. பாற்தாமன்: இந்த அங்காடிக்கான கட்டிட வசதியைப் பேரூ ராட்சி தர முன்வந்தால் அங்கே அதனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: பேரூராட்சிகளில் அதுபோல நடத்த முன்வந்தால் நல்லது. இப்போதே 50 அல்லது 52 சிறு சிறப்பங்காடி களைத் திறக்க பணவசதியிருந்தாலும் யாரும் முன்வரவில்லை.

திரு. எம். சுரேந்திரன்: தனிப்பட்டவர்களின் போட்டியில் இருந்து தவிர்க்கவும், நெருக்கடியான நேரத்தில் தனிப்பட்டவர்கள் விலையை அதிகமாக உயர்த்திக்கொண்டே போகாதிருக்க ஒரு கண்ட்ரோல் விலையில் மக்களுக்குப் பொருள்கள் கிடைக்கவும் இந்த அங்காடிகள் திறக்கப்படுகின்றன என்று கருது கிறேன். ஆகவே, நியாயவிலைக் கடைகளுக்குப் பதிலாக இந்த சிறுசிறு சிறப் பங்காடிகளை அங்கங்கே திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மாண்புமிகு உறுப்பினர் குறிப் பிட்டதுதான் நோக்கம். அதற்காகத்தான் அங்கங்கே திறக்கப்படுகின்றன.

திரு. பொ. பத்மநாபன்: பேரங்காடியிலுள்ள பொருள்களை ஊராட்சி, நகராட்சிகளுக்கும் அரசு அலுவலகங்களுக்கும் விநியோகிக்க ஆணை பிறப்பிப் பார்களா என்று அறிய விரும்புகிறேன்.